கழகம் அறிவிக்கிற வேட்பாளர்களை இரவும் பகலும் பாராமல் கடுமையாக உழைத்து

வெற்றிக்கனியை தலைவரின் கரங்களில் ஒப்படைக்க உறுதி ஏற்போம்!

திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆலோசனைக் கூட்டத்தில்

மாவட்ட கழகச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை !

திருவள்ளூர் மார்ச் 21:-

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட திருவேற்காடு நகரம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம், பூவிருந்தவல்லி நகரம், திருநின்றவூர் நகரம், திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் திருவள்ளூர் மேற்கு ஒன்றியம், திருமழிசை பேரூர் கழகம், பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம், திருவள்ளூர் வடக்கு ஒன்றியம், எல்லாபுரம் மத்திய ஒன்றியம், ஆவடி மாநகரக்திமுக சார்பில் கிளைக் கழக வட்டக் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்து கொண்டுஎதிர்வரும் சட்டமன்ற தேர்தல் பணிகள் மேற்கொள்வது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்

திருவேற்காடு பேருந்து நிலைய அருகில் நகரக் கழகச் செயலாளர் என். இ. கே.மூர்த்தி தலைமையில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம்சென்னேரி குப்பம் பகுதியில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் பூவிருந்தவல்லி நகர சார்பில் குமரன்சாவடி நகரக் கழக அலுவலகத்தில் நகரச் செயலாளர் ஜி.ஆர.திருமலை தலைமையில், ஆவடி மாநகரம் திமுக சார்பில் ஆவடி வார்ரூமில்

மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் தலைமையில் பகுதி செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பொன். விஜயன், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத் முன்னிலையில்

திருநின்றவூர் நகர திமுக சார்பில் நடுகுத்தகை மாவட்ட அவைத் தலைவர் இல்லத்தில் நகர செயலாளர் தி.வை.ரவிதலைமையில் திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் செவ்வாப்பேட்டை பகுதியில் ஒன்றிய கழக செயலாளர் சேபிரேம் ஆனந்த் தலைமையில், திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் காக்களூர் பகுதியில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில்

பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் கூடப்பாக்கம் பகுதியில் உள்ள ஒன்றிய கழக அலுவலகத்தில் ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு தலைமையில்

திருமழிசை பேரூர் கழக திமுக சார்பில் சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் அருகே பேரூர் கழகச் செயலாளர் தி.வே. முனுசாமி தலைமையில்,

திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் சாக்களூர் ஆர்.எம். ஹௌசில் ஒன்றிய கழக செயலாளர் டி.முரளி கிருஷ்ணன் தலைமையில் எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் வாணிம் சத்திரம் ஒன்றிய கழக அலுவலகத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் தங்கம் முரளி ஆகியோர் தலைமையில் மாநகர ஒன்றிய நகர பகுதிபேருர்களில் உள்ள வட்டக் கழகச் செயலாளர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் உடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு வருகின்ற சட்டமன்ற தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார் அப்போது அமைச்சர் பேசுகையில்முதலமைச்சர் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் கூறியதற்கேற்ப 23/04/2026 நடைபெருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் தலைமை அறிவிக்கின்ற வேட்பாளர்களை எந்த ஒரு விருப்பு வெறுப்பு இன்றி காலம் நேரம் பார்க்காமல் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர் அனைவரும் ஒன்றிணைந்து உழைத்து வெற்றி பெறச் செய்து கழகத் தலைவர் திருக்கரங்களின் ஒப்படைக்க வேண்டும் இதில் L பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட அவைத் தலைவர் ம. இராஜி, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல் வஷசன், எம். முத்தமிழ் செல்வன், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ். சங்கர், இளைஞரணி கே சுரேஷ்குமார், எம். மோகன், ஒ.ஆர்.நாகூர் கணி, வே.தியாகராஜன், ஜி.துர்கா பிரசாத், ப.குமரேசன், சங்கீதா சீனிவாசன், மற்றும் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக நிர்வாகிகள் வட்டக் கழக கிளைக் கழக செயலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்

தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு!

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து!

திருச்சி, மார்ச் 21-

தனி மனித வாழ்வை செம்மைப்படுத்தும் ரமலான் நோன்பு என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து அவரது வாழ்த்து செய்தி வருமாறு:

ரமளான் நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் அனைவருக்கும் உரித்தாகும்.

இஸ்லாமிய மார்க்கக் கடமையில் ஒன்றான நோன்பு, தனிமனித வாழ்வைச் செம்மைப்படுத்துவ

தோடு, நோன்பு மாதத்தில் ஏழைகளுக்குப் பங்கிட்டு அளிக்கும் கொடைகள் மூலம் சமுதாயத்தில் ஏழ்மை நீங்கி, அனைவரும் வளமோடு வாழ்வதற்கான வழியையும் திறந்து விடுகிறது என்பதைப் பார்க்கிறோம்.

முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நாடும் ஏடும் நானிலமும் போற்றும் திராவிட மாடல் நல்லாட்சியில் அனைத்து சமுதாய மக்களும் நோன்பை மதித்துப் போற்றி வருவதைப் பார்க்கும்போது, எல்லாரையும் மனதால் இணைக்கும் இந்தத் திராவிட மாடல் நல்லாட்சி எங்கணும் பரவவேண்டும் என்று பிரார்த்திக்கக் கடமைப்பட்டவர்களாகி விடுகிறோம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்', 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (உறவினர்) 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் உன்னதக் கொள்கைகளை நிலைநிறுத்தும் ரமளான் நோன்புத் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகள். எல்லாமும் எல்லாரும் பெற்று இனிதாக வாழ்ந்திட வாழ்த்துவோம்.

இவ்வாறு அவர் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

தாம்பரம் மாநகர வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கூட்டம்!

மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், மார்ச்.21-

தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

21.03.2026 சனிக்கிழமை காலை 09.00 மணியளவில், கேம்ப் ரோடு - சேலையூரில், உள்ள வாசுதேவா திருமண மாளிகையில்,எனது தலைமையில் (எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ) தாம்பரம் சட்டமன்றத்தொகுதி - வாக்குச்சாவடி நிலை முகவர்கள், (BLA -2)10பூத் ஒருங்கிணைப்பாளர்கள், கலந்தாலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற மக்களவைகழகக் குழுத் தலைவர், டி.ஆர். பாலு,பி.எஸ்.சி., எம்.பி., குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் - காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர்கள் கலந்து கொண்டு கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்க உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்தில் தலைமை தீர்மான குழு செயலாளர், மீ.அ.வைதியலிங்கம்,மேயர்க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பார்வையாளர், பரிதிஇளம்சுருதி ஆகியோர்களும், கலந்து கொண்டு நடைபெறுகின்ற,

இக்கூட்டத்திற்கு, மண்டலத் தலைவர் எஸ்.இந்திரன் வரவேற்புரையிலும், மண்டலத் தலைவர் டி. காமராஜ், பகுதி கழகச் செயலாளர்கள், எஸ். சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி ஆகியோர்கள் முன்னிலை யிலும், பகுதி துணைச் செயலாளர் எம்.சீனிவாச குமார் நன்றி கூறிட உள்ளார்.

நடைபெறுகின்ற, வாக்குச் சாவடி நிலை முகவர்கள் கூட்டத்தில் தலைமைச் செயற்குழு, பொது குழு உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், கிளைச் செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், BLA -2 மற்றும் 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பித்திடு மாறு, மாநகர கழகச் செயலாளர், எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க

முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுப்பீர்!

மக்களவையில் – முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 21–

30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடி யுரிமை அல்லது நீண்ட கால விசா போன்ற நிரந்தர சட்டத் தீர்வுகளை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் மீது ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் கோவை நாடாளு மன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்திவுள்ளார்.

1983 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இனக்கலவரம் காரணமாக நீண்ட காலமாகத் தமிழ் நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்க ளின் மிகவும் பரிதாபகரமான நிலைமைகள் குறித்து ஒன்றிய பிரதமருக்கு ஒருவகையான விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். ஒன்றிய அரசின் ஆதரவுடனும், ஒப்புதலுடனும் தமிழக அரசு தொடர்ந்து தங்குமிடம், வாழ்வாதாரம், கல்வி மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கி வருகிறது. தமிழகத்தில் தற்போது சுமார் 89,000 இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர், அவர்களில் பெரும்பாலானோர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு வசித்து வருகின்றனர். இவர்களில் 40 சதவீதம் பேர் இந்திய மண்ணில் பிறந்தவர்கள் சட்டப்படி வாழ்ந்தவர்கள், நிச்சயமற்ற தன்மை, குடியுரிமை அல்லது நீண்ட கால விசாக்கள் போன்ற நிரந்தர சட்ட தீர்வுகளை அவர்களால் இன்னும் பெற முடிய வில்லை. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண, தமிழக அரசு, இலங்கை தமிழர்களின் நிலை குறித்து விரிவான ஆய்வு நடத்த, புலம்பெயர்ந்த தமிழர் நலத்துறை அமைச்சர் தலைமையில் ஒரு ஆலோ சனைக் குழுவை அமைத்து,

30.6.1987க்கு முன் இந்தியாவில் பிறந்தவர்கள், தாய், தந்தை இந்தியராக இருப்பவர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த குடி யுரிமை பெற்றவர்கள் என பல்வேறு பிரிவுகளை

சேர்ந்த இலங்கை தமிழர்களுக்கு பரிந்துரை செய்தது. மேலும், குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) சட்டத்தில் சமீபத்திய கொள்கை முன்னேற்றங்கள்,

ஒரு மனிதாபிமான அணுகுமுறை. எனவே, 09.01.2015 வரை இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களை சட்ட விரோதக் குடியேறிகளாகக் கருதக் கூடாது என்று ஒன்றிய அரசு முறையான விளக்கம் அளிக்க வேண்டும். இந்த தெளிவுபடுத்தல் மிகவும் தேவையான சட்டத் தெளிவை வழங்குவதோடு, இலங்கைத் தமிழர்களுக்கான நீண்ட கால சட்ட தீர்வையும் உறுதி செய்யும். மேலும், இலங்கைத் தமிழர்களின் குடியுரிமை விண்ணப்பங் களை பரிசீலிப்பதைத் தடுக்கும் முந்தைய நிறைவேற்று ஆணையை ரத்து செய்ய வேண்டும். இது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் நீண்ட காலமாக வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க நிரந்தர நடவடிக்கை எடுக்கக் கோரி ஒன்றிய பிரத மருக்கு கடிதம் எழுதியுள்ளார். எனவே, 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை அல்லது நீண்ட கால விசா போன்ற நிரந்தர சட்டத் தீர்வுகளை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் மீது ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவையில் கோவை நாடாளு மன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வலியுறுத்திவுள்ளார்.

அரசு அலுவலகங்களில்

மாற்றுத் திறனாளிகளை அனுமதிக்க சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுமா?

மக்களவையில் – எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி?

புதுடெல்லி, மார்ச் 21–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 17.3.26 அன்று மக்களவையில், அரசு அலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகளை இடையூறு இல்லாமல் அனுமதிக்க தேவையான சிறப்பு திட்டங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தும் எண்ணம் உள்ளதா? என்றும் இதுவரை இது போன்ற திட்டங்களுக்கான நிதியுதவி எவ்வளவு அளிக்கப்பட்டுள்ளது? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்

தல் துறையின் இணையமைச்சர் பி.எல்.வர்மா அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் மாண்புமிகு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில பின்வருமாறு:–

சுகம்யா பாரத் திட்டம் கடந்த 2015 ஆண்டு முதல் அரசு அலுவலகங்களிலும், பேருந்துகளிலும் மாற்றுத் திறனாளிகள் எளிதில் செல்லக் கூடிய வகையில் நிறைவேற்றப்படு கிறது என்றும், மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016ன் படி, மாற்றுத் திறனாளிகள் இடையூறு இல்லாமல் அரசு அலுவலகங்களுக்கும் சென்று வர தேவையான கட்டிட மாற்றங்களை செய்வதற்கு உரிய நிதியை ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கும் அரசு அலுவலகங்களுக்கும் வழங்கி வருகிறது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா முழுவதும் மாற்றுத் திறனாளிகள் எளிதில் செல்லக் கூடிய வசதிக்காக ரூபாய் 606 கோடிகள் இதுவரை செலவிடப்பட்டுள்ளதாகவும், தமிழ் நாட்டிற்கென 1844 அரசு கட்டிடங்களுக்காக ரூபாய் 73 கோடிகள் அளவிற்கு ஒன்றிய அரசு நிதியுதவி செய்துள்ளது என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையமைச்சர் பி. எல். வர்மா அவர்கள் மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலளித்தார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார் கோவில் மத்திய ஒன்றியம் மங்கதேவன்பட்டி ஊராட்சி, மோசகுடி வாக்குச்சாவடி எண் 52 ல் 20க்கும் மேற்பட்டோர் 'அதிமுக' விலிருந்து அவர்கள் வகித்து வந்த பல்வேறு பொறுப்புக்களிலிருந்து விலகி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வில், ஒன்றிய கழக செயலாளர் சி சண்முகம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர். செ.குறிஞ்சிவாணன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம் ஒன்றிய துணைச் செயலாளர் மோசகுடி ரவி, ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் பி செல்லத்துரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

மதுரை, சேலம், தென்காசி, கோயம்புத்தூர், ஈரோடு உள்ளிட்ட

8 மாவட்டங்களில் திடீரென பெய்த ஆலங்கட்டி மழை!

சென்னை, மார்ச். 21-

மதுரை, சேலம் மற்றும் தென்காசி மாவட்டங்களில் கடந்த சில நாட்களுக்கு முன்பு திடீரென பெய்த ஆலங்கட்டி மழையினால்

சுமார் 810 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல், எண்ணெய் வித்துகள், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு ஆகிய வேளாண் பயிர்களும்;

கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், சேலம், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் சூரைக்காற்றுடன் பெய்த மழையினால் சுமார் 40 எக்டரில் சாகுபடி செய்யப்பட்ட வாழை, சின்ன வெங்காயம், முருங்கை, தென்னை, மலர்கள் ஆகிய தோட்டக்கலைப் பயிர்கள் என மொத்தம் 850 எக்டரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டதாக முதற்கட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஆலங்கட்டி மழையினால் அறுவடைப் பருவத்திலுள்ள நெற்பயிர் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இதனைத்தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் வருவாய் மற்றும் வேளாண்மைத் துறை இணைந்து கணக்கெடுப்பு செய்து பாதிக்கப்பட்ட பயிர் பரப்பினை உறுதிசெய்து அறிக்கை அனுப்பிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புழல் ஒன்றியத்தில் உள்ள கிராண்ட்லைன் அண்ணா தெருவில் வசித்து வரும் கழக இளைஞர் அணியினர் பி.நிர்மல், பி.விமல் ஆகியோர் தந்தை கே.பாண்டியன் மறைவு செய்தி அறிந்து அவரது உடலுக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார். உடன் நா.ஜெகதீசன், சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன், ம.மணி, செ.யுவராஜ், சுதாகர், தினேஷ், ம.குறளரசன், பிரேம், நாவலன், ஐயப்பன், மணிகண்டன், தினேஷ், செல்வகுமார், கார்த்திக், வினோத், அதியமான், சரவணன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.